Puducherry / Regional Bulletin / Tamil /18.10 Hrs. / 11.01.2025 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 11.01.2025 - சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

போதைப் பொருள் கடத்தல் குறித்த தேசிய மாநாட்டை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுடெல்லியில் தொடங்கி வைத்தார்.

தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு, நாளை புதுடெல்லியில் நடைபெறும் இளம் தலைவர்கள் மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

அயோத்தியில் குழந்தை ராமர் பிரதிஷ்டை செய்யப்பட்டதன் முதலாம் ஆண்டு தினம் இன்று கொண்டாடப் படுவதை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நாளை முதல் தலைக் கவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டுள்ளதாக போக்குவரத்துப் போலிசார் தெரிவித்துள்ளனர்.

***அமித் ஷா -1 (18)***

போதைப் பொருள் கடத்தல் குறித்த தேசிய பாதுகாப்பு மண்டல மாநாடு இன்று புதுடெல்லியில் தொடங்கியது. இம்மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தொடங்கி வைத்தார். இம்மாநாட்டை போதைப்பொருள் கட்டுப்பாட்டு மையம் ஏற்பாடு செய்துள்ளது. வட இந்தியாவின் 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சிறப்பு கவனம்

செலுத்தி போதைப்பொருள் கடத்தல் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

கடந்த 10 ஆண்டுகளில் 56 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ள நிலையில், கிட்டத்தட்ட 24 லட்சம் கிலோ போதைப் பொருள்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்நிகழ்ச்சியில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் Manas-2 ஹெல்ப் லைன் விரிவாக்கத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

போதைப் பொருள் கட்டுப்பாட்டு பணியகத்தின் போபால் மண்டலப் பிரிவின் புதிய அலுவலக வளாகத்தையும் திரு. அமித் ஷா திறந்து வைத்தார். இன்றுமுதல் வரும் 25ஆம் தேதி வரை போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த காலகட்டத்தில் 2 ஆயிரத்து 411 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் அகற்றப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

***அமித் ஷா -2 (3)***

வரும் 2047ஆம் ஆண்டிற்குள் போதைப் பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*தேசிய இளைஞர் தினம் -1 (18)*

தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு, சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை நினைவு கூறும் வகையில், நாளை புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில், வளர்ச்சி அடைந்த இந்தியா இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில், நாடு முழுவதிலும் இருந்து சுமார் மூவாயிரம் இளம் தலைவர்கள், பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் கலந்துரையாட உள்ளனர்.

வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான இளம் தலைவர்கள் உரையாடல் நாட்டின் இளைஞர்களை தேசத்தின் வளர்ச்சிப் பயணத்தில் ஈடுபடுத்தும் ஒரு தனித்துவமான முயற்சி என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். தேசிய இளைஞர் விழா மற்றும் இளம் தலைவர்கள் உரையாடல் குறித்து மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை இணையமைச்சர் திரு. ரக்ஷா காட்சே எழுதிய கட்டுரையை திரு. மோடி இன்று தமது சமூக வலைதளப் பதிவில் பகிர்ந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

நாளை நடைபெறும் முதல் நாள் நிகழ்ச்சியில் மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா ஒரு லட்சம் இளைஞர்களை அரசியல் சார்பு இல்லாமல் அரசியலில் ஈடுபடுத்த வேண்டும் என்ற பிரதமரின் சுதந்திர தின அழைப்பின் படி, இந்த நிகழ்ச்சி நடைபெறுவதாகக் கூறினார்.

***தேசிய இளைஞர் தினம் - 2 (4)***

நிகழ்ச்சியில், பங்கேற்ற 10 பங்கேற்பாளர்கள் குறித்து சிறந்த கட்டுரைகளின் தொகுப்பையும் பிரதமர் வெளியிட உள்ளார். இந்த கட்டுரையின் கருப்பொருள் தொழில்நுட்பம், நிலைத்தன்மை, பெண்களுக்கு அதிகாரமளித்தல், உற்பத்தி மற்றும் விவசாயம் போன்ற துறைகளை உள்ளடக்கியதாகும்.

***அயோத்தி ஆண்டுவிழா -1 (18)***

அயோத்தியில் குழந்தை ராமர் பிரதிஷ்டை செய்யப்பட்டதன் முதலாம் ஆண்டு தினம் இன்று கொண்டாடப் படுகிறது. இதனையொட்டி, ஸ்ரீராமர் கோவில் முழுவதும் மலர்களால் அலங்கரிக்கப் பட்டு, ராம் லல்லாவுக்கு பஞ்சாமிர்தம் மற்றும் அபிஷேகம் செய்யப்பட்டு, 56 உணவு வகைகள் பிரசாதமாக வழங்கப்பட்டது. இதனையொட்டி, நாடு மற்றும் உலகம் முழுவதிலும் இருந்து பக்தர்கள் அயோத்தி வந்துள்ளனர்.

இந்த சிறப்பு விழாவில், தங்கம் மற்றும் வெள்ளியால் நெய்யப்பட்ட ஆடைகளை அணிந்து குழந்தை ராமர் பக்தர்களுக்கு தரிசனம் தருகிறார். இந்த 3 நாள் விழாவை, அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தொடங்கி வைத்தார்.

தினமும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை பகவான் ராமருக்கு பஜனை நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது. இது தவிர ராமர் குறித்த கதா காலட்சேபம், சொற்பொழிவுகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளும் தொடர்ந்து

நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சியை தூர்தர்ஷன் தொலைகாட்சி நேரடி ஒளிபரப்பு செய்கிறது.

அயோத்தியில் இன்று குழந்தை ராமர் சிலை நிறுவப் பட்டதன் முதலாம் ஆண்டு தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். பல நூற்றாண்டுகள் தியாகம், தவம், மற்றும் போராட்டத்திற்குப் பிறகு இந்த கோவில் கட்டப்பட்டதாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

***அயோத்தி ஆண்டுவிழா -2 (4)***

இது நமது கலாச்சாரம் மற்றும் ஆன்மீகத்தின் சிறந்த பாரம்பரியம் என்றும் அவர் கூறியுள்ளார். இந்த தெய்வீக மற்றும் அர்ப்புதமான ராமர் கோவில், வளர்ந்த இந்தியாவிற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் சிறந்த ஆதாரமாக மாறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

***மோடி - பிரான்ஸ் பயணம் (8)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி பிப்ரவரி மாதம் 11ஆம் தேதி பிரான்ஸ் நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள உள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. இமானுவேல் மேக்ரான் அறிவித்துள்ளார். அவரது இந்த பயணத்தின் போது பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவு மாநாட்டிலும் அவர் பங்கேற்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த பயணத்தின் போது பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரானை சந்திக்கும்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இருநாட்டு உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

***பிரதமர் – இலட்சியம் (8)***

இலட்சியங்களைத் தாண்டி குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டே ஒருவர் அரசியலுக்கு வரவேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றில் அரசியலுக்கு ஒருவர் வருவதற்கான திறன் குறித்த கேள்வி ஒன்றிற்கு பதில் அளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். மேலும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் சமூக ஊடகங்கள் முக்கிய கருவியாக திகழ்வதாக பிரதமர் பதிலளித்தார். இலட்சியங்களைத் தாண்டி குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டே ஒருவர் அரசியலுக்கு வரவேண்டும் என்று பிரதமர் தெரிவித்தார்.

***கும்பமேளா (6)***

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மஹா கும்பமேளாவிற்கு இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில், பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வெவ்வேறு மாநிலங்களில் இருந்து, வருவதற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரயில்கள், 350க்கும் மேற்பட்ட பேருந்துகள் மற்றும் கூடுதல் விமானங்கள் இயக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

ஹெல்மெட் (15)

புதுச்சேரியில், நாளை முதல் தலைக்கவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இதனை அடுத்து, போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில காவல்துறை அறிவித்துள்ளது. நாடு முழுவதும் சாலை விபத்தில் கடந்த 3 ஆண்டுகளில் புதுச்சேரி மாநிலம் 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, கட்டாய ஹெல்மெட் சட்டத்தை அமல்படுத்த மாநில போக்குவரத்துத் துறை முடிவு செய்துள்ளது. இதற்காக கடந்த 2 மாதங்களாக பொதுமக்களிடம் போக்குவரத்து போலிசார் தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டு வந்தனர். இறுதியில் நாளை ஞாயிற்றுக் கிழமை முதல் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என்று மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, கட்டாய ஹெல்மெட் திட்டம் நாளை முதல் அமல் படுத்தப்படும் என்று காவல்துறை அறிவித்துள்ளது.

ஹெல்மெட் அணியாமல் வாகனத்தில் சென்றால், அவர்கள்மீது அபராதம் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் இது குறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்....

(வாய்ஸ்)

HMPV தொற்று *(15)*

புதுச்சேரியில், தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த 5 வயது குழந்தைக்கு HMPV தொற்று உறுதி செய்யப்பட்டு இருந்ததாகவும், அக்குழந்தை சிகிச்சை முடிந்து வீடு திரும்பி உள்ளதாக மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. HMPV தொற்று தொடர்பாக புதுச்சேரி சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், குழந்தைக்கு எடுக்கப்பட்ட ரத்த மாதிரியின் பரிசோதனை முடிவில், தொற்று இருந்தது தெரிய வந்துள்ளது என்றும். குழந்தையின் பெற்றோருக்கு இது தொடர்பாக போதிய விழிப்புணர்வு அளிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வைரஸ் பரவல் குறித்து மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. வைரஸ் தொற்று பாதிப்புக்கு சிகிச்சை அளிக்க புதுச்சேரி கோரிமேடு மார்பு நோய் மருத்துவமனையில், முதியோருக்கு 10 படுக்கைகள் கொண்ட ICU வசதியும், ராஜீவ் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் குழந்தைகளுக்காக 6 படுக்கைகள் கொண்ட பிரத்யேக ICU வசதியும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

***ராஜ்நாத் சிங் (9)***

பாதுகாப்புத் துறையை தன்னிறைவு பெற்றதாக மாற்ற கொள்கை அளவிலான சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். அடுத்த மாதம் நடைபெற உள்ள விமானப் படையின் வான் சாகச நிகழ்ச்சி குறித்து,

டெல்லியில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் அவர் பங்கேற்றுப் பேசினார். அப்போது, நான்காம் தலைமுறைக்கான போர் விமானங்கள், அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்கள், முக்கிய போர் டாங்கிகள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் ஆகியவற்றை தயாரிக்கும் திறன் கொண்ட நாடுகளின் பட்டியலில், இந்தியா தற்போது இடம் பெற்றிருப்பதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

***பாம்பன் பாலம் (4)***

மண்டபத்தையும் – ராமேஸ்வரத்தையும் இணைக்கும் புதிய பாம்பன் ரயில் பாலம் ஒரு தனித்துவமான பாலம் என்றும், சர்வதேச நிபுணர்களின் தொழில்நுட்ப ஆலோசனையின்படி அது கட்டி முடிக்கப் பட்டுள்ளதாக மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

***அஸ்வினி வைஷ்ணவ் (10)***

தமிழகத்தில் உள்ள முன்னணி எலக்ட்ரானிக்ஸ் சிஸ்டம்ஸ் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி நிறுவனமான சிர்மா எஸ்.ஜி.எஸ் டெக்னாலஜி லிமிடெட்டின் அதிநவீன மடிக்கணினி தயாரிப்பதற்கான புதிய மையத்திற்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று அடிக்கல் நாட்டினார். இந்நிறுவனம் தைவான் நாட்டை சேர்ந்ததாகும். இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் சிர்மா எஸ்.ஜி.எஸ், எம்.எஸ்.ஐ உடன் இணைந்து மேக் இன் இந்தியா

திட்டத்தின் கீழ் மடிக்கணினிகளை தயாரிக்கும் என்று கூறினார். இது ஆண்டுக்கு ஒரு லட்சம் மடிக்கணினிகளை ஆரம்பத்தில் உற்பத்தி செய்யும் என்றும், அடுத்த 2 ஆண்டுகளில் இது படிப்படியாக அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

***ஓம்பிர்லா (9)***

காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் தலைமை அதிகாரிகள் 28ஆவது மாநாட்டை அடுத்த ஆண்டு இந்தியா நடத்தும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் விடுத்துள்ள செய்தியில் இந்த நிகழ்வு ஒரு அர்த்தமுள்ள உரையாடல் மற்றும் உலகளாவிய பிரச்சனைகளை தீர்ப்பதற்கான கூட்டு முயற்சிகளை வளர்க்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இந்த 28ஆவது மாநாடு செயற்கை நுண்ணறிவு மற்றும் சமூக ஊடகங்களை நாடாளுமன்றத்தின் செயல்பாட்டில், செயல்படுத்துவதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கார்னிவல் விழா (11)

காரைக்கால் மாவட்டத்தில் வரும் 16ஆம் தேதி நடைபெற உள்ள கார்னிவல் திருவிழாவுக்கான இறுதி கட்ட ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில குடிமைப்பொருள் வழங்கல் மற்றும்

நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பி.ஆர்.என். திருமுருகன், மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு. குலோத்துங்கன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில் காரைக்காலில் வருடாந்திரம் நடைபெறும் கார்னிவல் திருவிழாவை சிறப்பாக நடத்த ஆலோசிக்கப் பட்டது. மேலும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், பொழுதுபோக்கு அம்சங்களை உருவாக்குதல், பேருந்து வசதிகள் உள்ளிட்டவற்றை ஏற்படுத்துதல் போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

போதைப் பொருள் கடத்தல் குறித்த தேசிய மாநாட்டை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுடெல்லியில் தொடங்கி வைத்தார்.

தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு, நாளை புதுடெல்லியில் நடைபெறும் இளம் தலைவர்கள் மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

அயோத்தியில் குழந்தை ராமர் பிரதிஷ்டை செய்யப்பட்டதன் முதலாம் ஆண்டு தினம் இன்று கொண்டாடப் படுவதை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நாளை முதல் தலைக் கவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டுள்ளதாக போக்குவரத்துப் போலிசார் தெரிவித்துள்ளனர்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / NV / RK**